### தி.மு.கழகம் சிறப்பான ஒரு தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருப்பதால்

# மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மாபெரும் வெற்றி வாகை சூடும்!

### மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அறிக்கை!

சென்னை, ஏப்.1- தி.மு.கழகம் சிறப்பான ஒரு தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருப்பதன் மூலம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மாபெரும் வெற்றி பெறும் என்று மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா கூறியுள்ளார்.

இதுகுறித்து மனிதநேய மக்கள் கட்சியின் மாநில தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் அதிகமான கட்சிகளை ஒருங்கிணைத்து வலுவான கூட்டணியை அமைத்துள்ள முதல்வர் ஸ்டாலின் முதல் சதத்தை யும் தமிழ் நாட்டு மக்களின் வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் சிறப்பானதொரு தேர்தல் அறிக்கையை வழங்கி இருப்பதன் வாயிலாக இரண்டாவது சதத்தை யும் அரசியல் களத்தில் விளாசி இருப்பது சிறப்புக்கு ரியதாகும். 517 வாக்குறுதி களை வகைப்படுத்தி வழங்கி இருப்பது தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் அமைந்துள்ளது. முத்தாய்ப்பாக 8000 கூப்பன் வழங்கும் இல்ல த்தரசி திட்டம் தமிழக மகளிர்களின் பெரும் வரவேற்பை பெற்றிருக்கிறது.

**சிறுபான்மையினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்!**

சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் மாவட்டங்களில் திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்கள் அமைக்கப்படும் என்பதும் சிறுபான்மையினர் இளைஞர்கள் இளம் பெண்கள் ஆகியோருக்கு சிறப்பு திறன் பயிற்சி வகுப்புகளில் 25,000 இளைஞர்கள் பங்கேற்பார்

கள் என்கிற அறிவிப்பும் வக்பு வாரியத்தின் வாயிலாக பெண்கள் கல்வியை ஊக்குவிக்க கூடுதல் கல்லூரிகள் திறக்கப்படும் என்பதும் சிறுபான்மையினர் வாழ்வியல் தரத்தை உயர்த்தும் உன்னதமான திட்டங்கள் ஆகும்.

ஒன்றரை லட்சம் அரசு காலி பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும் என்கிற அறிவிப்பு இளைஞர்கள் மத்தியில் உற்சாகத்தை வழங்கியிருக்கிறது.

கடலூர் உள்ளிட்ட 11 அரசு தலைமை மருத்துவமனைகளில் புற்று நோய்க்கான நவீன சிகிச்சை ஏற்படுத்தப்படும் என்கிற அறிவிப்பும் ஏழை எளிய விளிம்பு நிலை மக்களுக்கு மிகவும் பயன் தரக்கூடிய ஒன்று.

எந்த வகையில் பார்த்தாலும் எல்லா அறிவிப்புகளுமே மக்களுக்கு பயன் தரக்கூடியவை யாகவும் சிறப்பானவையாகவும் அமைய பெற்று இருக்கிறது.

சிறப்பான ஒரு தேர்தல் அறிக்கையை வழங்கி இருப்பதன் வாயிலாக மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி மிகப்பெரிய அளவில் வெற்றி வாகை சூடும் என்பதை உறுதி யிட்டுச் சொல்ல முடியும்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் சிவகங்கை தொகுதியில் போட்டியிடும் முக்குலத்தோர் புலிப் படை தலைவர் நடிகர் கருணாசுக்கு சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சால்வை அணிவித்து வாழ்த்து கூறினார். உடன் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர், கொத்தமங்கலம் சேது, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அணைக்கட்டு - வேலூர் தொகுதிகளில்,

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கழக வேட்பாளர்களை ஆதரித்து தீவிரப் பிரச்சாரம்!

### மாவட்ட செயலாளர் ஏ. பி. நந்தகுமார் எம். எல். ஏ. அறிக்கை!

வேலூர், ஏப்.1- நடைபெற உள்ள 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில் கழக வேட்பாளர்களை ஆதரித்து துணை முதல்வர் அவர்கள் பொது மக்களிடையே வாக்கு சேகரிக்க உள்ளார். இதுகுறித்து வேலூர் தெற்கு மாவட்டச் செயலாளரும் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ தனது அறிக்கையின் வாயிலாக பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் கடந்த 2021 முதல் கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் திராவிட மாடல் ஆட்சியில் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்து நிறைவேற்றி இந்திய துணை கண்டத்தில் முன் மாதிரியான மாநிலமாக தமிழ்நாட்டை வளர்ச்சி பெற்ற மாநிலமாக தனது அயராத உழைப்பில் கட்டி அமைத்துள்ளார். தற்போது

2026 ஏப்ரல் 23 அன்று நடைபெற உள்ள சட்டமன்ற பொதுத் தேர்தலில் கழக வேட்பாளர்கள் வெற்றி பெற ஏதுவாக கழக தேர்தல் அறிக்கை வெளியிட்டு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். மீண்டும் இரண்டாவது முறையாக கழக தலைவர் தளபதி அவர்கள் தமிழ்நாடு அரசு அரியணையில் அமர்ந்து வெளியிடப்பட்டுள்ள தேர்தல் அறிக்கையை நடைமுறைபடுத்தி முழுமையான வளர்ச்சி பெற்ற தமிழ் நாட்டை கட்டமைத்திட ஏதுவாக கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வேலூர் தெற்கு மாவட்ட திமுகவிற்கு ட்பட்ட அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுகழக வெற்றி வேட்பாளர் ஏ.பி. நந்தகுமார் அவர்களை ஆதரித்தும் பொதுமக்களிடையே வாக்குகள் சேகரிக்கும் பொருட்டு இன்று (01.04.2026-புதன் கிழமை ) மாலை 06.00 மணிக்கு ஒடுக்கத்தூர் பேருந்து நிலையத்திலும், மாலை 06.30 மணிக்கு அணைக்கட்டு பேருந்து நிலையத்திலும் தேர்தல் பரப்புரை ஆற்ற உள்ளார்.

வேலூர் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.கழக வெற்றி வேட்பாளர் ப.கார்த்திகேயன் அவர்களை ஆதரித்தும் பொதுமக்களிடையே வாக்குகளை சேகரிக்கும் பொருட்டு இரவு 07.00 மணிக்கு வேலூர் மண்டி வீதியிலும் தேர்தல் பரப்புரை ஆற்ற உள்ளார்.

எனவே அணைக்கட்டு மற்றும் வேலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை கழக நிர்வாகிகள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், கூட்டணி மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், வட்ட, வார்டு மற்றும் ஊர்கிளை நிர்வாகிகள், கழக இந்நாள் முன்னாள் முன்னோடிகள் ஆகியோர்கள் அனைவரும் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு வேலூர் தெற்கு மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ, தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. கூட்டணிக்கு தொடர்ந்து பெருகி வரும் மக்கள் ஆதரவு!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் 'திராவிட மாடல்' ஆட்சியை அமைப்பது உறுதி!

### "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, ஏப்.1- தி.மு.க. கூட்டணிக்கு தொடர்ந்து மக்கள் ஆதரவு பெருகி வருவதால் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் "திராவிட மாடல்" ஆட்சியை அமைப்பது உறுதி என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கருத்து தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

நீண்ட நெடிய வரலாறு கொண்ட திராவிட முன்னேற்ற கழகத்தை, கலைஞரின் மறைவுக்கு பிறகும் கட்டிக் காத்து வெற்றிபெற செய்திருக்கிறார் மு.க.ஸ்டாலின். 2019 நாடாளுமன்ற தேர்தலில் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திமுக கூட்டணி, தமிழகத்தில் ஓர் இடத்தை தவிர்த்து மற்ற 38 இடங்களையும் கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது. 2021ல் திமுக ஆட்சி அமைய வேண்டும் என்ற குறிக்கோளோடு தமிழகத்தில் தீவிர பிரசாரங்கள் மேற்கொண்டார். அதன் பலனாக தி.மு.க. கூட்டணி, 159 இடங்களை கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது.

பெரிய நகரங்களை தாண்டி பெரும்பாலான மாவட்டங்களிலும் பெரிய

தினகரன்

மார்ச் 31, 2026 செவ்வாய்க்கிழமை

மீண்டும் திராவிட மாடல்

நீண்ட நெடிய வரலாறு கொண்ட திராவிட முன்னேற்ற கழகத்தை, கலைஞரின் மறைவுக்கு பிறகும் கட்டிக் காத்து வெற்றிபெற செய்திருக்கிறார் மு.க.ஸ்டாலின். 2019 நாடாளுமன்ற தேர்தலில் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திமுக கூட்டணி, தமிழகத்தில் ஓர் இடத்தை தவிர்த்து மற்ற 38 இடங்களையும் கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது. 2021ல் திமுக ஆட்சி அமைய வேண்டும் என்ற குறிக்கோளோடு தமிழகத்தில் தீவிர பிரசாரங்கள் மேற்கொண்டார். அதன் பலனாக திமுக கூட்டணி, 159 இடங்களை கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது.

பெரிய நகரங்களை தாண்டி பெரும்பாலான மாவட்டங்களிலும் பெரிய நிறுவனங்களின் தொழிற்சாலைகளை கொண்டு வந்து வேலை வாய்ப்பு, அப்பகுதியின் பொருளாதாரத்தையும் மேம்படுத்தினார். இதன்பலனாக தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் கணிசமாக உயர்ந்து, தேசிய சராசரியை விட 1.77 மடங்கு அதிகமாக, சுமார் ரூ.3.62 லட்சம் என்ற நிலையை எட்டியுள்ளது. இந்தியாவில் அதிக தனிநபர் வருமானம் கொண்ட முன்னணி மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. இது மாநிலத்தின் வலுவான பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில்துறை முன்னேற்றத்தை காட்டுகிறது.

இந்தியாவின் சராசரி தனிநபர் வருமானத்தை விட தமிழ்நாட்டின் வருமானம் 1.77 மடங்கு அதிகம். 2030-31க்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்டும் இலக்கை நோக்கி தமிழ்நாடு பயணிக்கிறது. தனிநபர் விமர்சனம், அரசியல் ரீதியான விமர்சன ங்களுக்கு பதிலடியாக மக்களுக்கான ஆட்சியை நடத்தி காட்டி உள்ளார். கடந்த 5 ஆண்டில் அனைவரையும் அரவணைத்து செல்லும் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த போக்கு அவர் மீது அதீத நம்பிக்கையை மக்களுக்கு உண்டாக்கியது. 2 நாடாயளுமன்ற தேர்தல், 2 சட்டமன்ற தேர்தலிலும் கூட்டணி கட்சிக்காரர்களை அரவணைத்து சென்று தொகுதி பங்கீடு முடித்து தொகுதிகளை பிரித்து கொடுத்து 164 தொகுதிகளுக்கும் தி.மு.க. வேட்பாளர்களை அறிவித்தது, இந்தியாவில் உள்ள அனைத்து கட்சிகளுக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

தி.மு.க. தேர்தல் அறிக்கையை நேற்று முன்தினம் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். அதில் காலை உணவு திட்டம் 8ம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும். இல்லத்தரசிகளுக்கு ரூ.8,000 மதிப்புள்ள கூப்பன் வழங்கப்படும். மகளிர் உரிமை தொகை 2,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பது உள்பட பல்வேறு அறிவிப்புகள் தமிழ்நாட்டின் வளர்ச்சி புதிய உச்சத்தை எட்டும் என்பதற்கு சான்றாக உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளிலும் நேற்று வேட்புமனு தாக்கல் துவங்கி உள்ளது.

தேர்தல் திருவிழா களை கட்ட துவங்கி உள்ள நிலையில், முதல் நாளான நேற்றே முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கொளத்தூர் தொகுதியில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்த கையோடு திறந்த ஜீப்பில் தனது பிரசாரத்தை துவங்கி விட்டார். திருவாரூரில் இன்று பிரசாரம் செய்கிறார்.

தி.மு.க. கூட்டணிக்கு தொடர்ந்து மக்கள் ஆதரவு பெருகி வருவதால் மு.க.ஸ்டாலின், மீண்டும் திராவிட மாடல் ஆட்சியை அமைப்பார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தேர்தல் களத்தில்

# மாணவர்களை நோக்கி மாணவர் அணி!

### மாணவர் அணிச் செயலாளர் வீரமணி ஜெயகுமார் அறிக்கை!

சென்னை, ஏப்.1- "நடைபெறவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் 'மாணவர்களை நோக்கி மாணவர் அணி' என்ற தலைப்பில் மாணவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்ய விருப்பதாக மாணவர் அணி செயலாளர் வீரமணி ஜெயகுமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வரு மாறு:-

கழக தலைவர் அவர்களை அரியணை ஏற்றும் வகையில் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைப்பதற்காக "மாணவர்களை நோக்கி திமுக மாணவர் அணி"என்ற முன்னெடுப்போடு மாணவர்களிடம் மாணவர்களை சமூக வலைதளம் மூலம் தொகுதி வாரியாக மாணவர் வாயிலாக அனுகும் வகையில் WHTSAPP GROUP அமைத்து தலைவர், இளம் தலைவர் மற்றும் ஒவ்வொரு தொகுதி வேட்பாளரை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கும் பணியினை முன்னெடுத்துள்ளோம்.

**கல்லூரி வாயிலில்!**

கல்லூரி மாணவர்களை சந்தித்து திமுக மாணவரணி நிர்வாகிகள் மற்றும் தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகள் மூலம் கழக வேட்பாளர்களுக்கு நம் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் கரத்தை வலுப்படுத்தும் வண்ணம் மாணவர்கள் இடையே தேர்தல் பிரச்சாரம் மற்றும் துண்டறிக்கை வழங்கப்பட உள்ளது.

அது சமயம் கழகத் தலைவர் அவர்களின் இந்த ஐந்து ஆண்டு சாதனைகளான காலை உணவு திட்டம், நான் முதல்வன், புதுமைப்பெண் திட்டம் தமிழ்ப்புதல்வன் போன்ற திட்டங்களை மாணவர்களிடையே எடுத்துக் கூறியும் தேர்தல் அறிக்கையில் மாணவர்களுக்காக அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு நன்றியும்

★ எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு காலை உணவு திட்டம் விரிவுபடுத்தல்

★ 35 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினியும்

★நான் முதல்வன் திட்டம் மூலமாக வேலை வாய்ப்புக்கு பயிற்சி எடுக்கும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகையும் கொடுத்த நலத்திட்டங்களை எடுத்துக் கூறி மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைக்கும் வகையில் தலைவரின் கரத்தை வலுப்படுத்துவோம் என்று உறுதி எடுத்துக் கொள்கிறோம்.

இவ்வாறு திருமதி வீரமணி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில்

# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், ஏப்.1- விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி அறிக்கை வருமாறு:

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் இன்று (01.04.2026 புதன்கிழமை) காலை 9.00 மணிக்கு திருக்கோவிலூர், தேவி முருகன் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது கழக துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி எம்.எல்.ஏ அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பொதுச்செயலாளர் முனைவர் து.ரவிக்குமார் எம்.பி மற்றும் தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் முன்னி

லையில் திருக்கோவிலூர் சட்ட மன்றத் தொகுதி யின் வெற்றி வேட்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றுகிறார்.

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் இன்று (01.04.2026 -புதன்கிழமை) மாலை 4.00 மணிக்கு விக்கிரவாண்டி அப்துல் சலாம் ரைஸ் மில் வளாகத்தில் நடைபெற உள்ளது. விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி தலைமையில் கழக துணைப் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்களும், விடு தலை சிறுத்தைகள் கட்சி பொதுச்செயலாளர் முனைவர் து.ரவிக்குமார் எம்.பி மற்றும் தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் முன்னிலையில் விக்கிர வாண்டி சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்களை அறி முகப்படுத்தி சிறப்புரையாற்றுகிறார்.

மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன் , இரா.கற்பகம், தலைமை கழக வழக்கறிஞர் சுவை. சுரேஷ், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ. தேன்மொழி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள கூட்டத்தில் மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், நிர்வாகிகள், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பி னர்க ள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தேர்தல் பணிக் குழுஒருங்கிணைப்பாளர்கள், உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு களின் பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA 2, BLC, BDA, கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி தொகுதி தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. செஞ்சி கிழக்கு ஒன்றியம் சிங்கவரம்ஊராட்சியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்துதனது பிரச்சாரத்தை தொடங்கினார்.அருகில் மதச்சார்பற்ற முற்போர்க்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

த. மாசிலாமணி

ஏப்ரல் 1 (2021)

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பேச்சுகளால் ஈர்க்கப்பட்டு, இளமைப் பருவம் முதலே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

தலைமைக் கழகப் பேச்சாளராகவும், மாநில தொண்டர் அணிச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இவர் படித்தபோது, விபரீதமான – விரும்பத்தகாத – வேண்டாத ஒரு நிலைமை உருவாக்கப்பட்டு, அதன் விளைவாக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

1982ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இவரது மணவிழாவினை நடத்தி வைத்தபோது "புரட்சிக் கவிஞர் வரிகளுக்கேற்ப சிறுத்தைக் கூட்டத்தில் உள்ள ஒரு சிறுத்தைதான் தம்பி மாசிலாமணி'' என்று பாராட்டினார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.